පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය- 79

ආයතනයේ නම - දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, මාතලේ.

පාර්ලිමේන්තුවේ රාජ්‍ය ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் -79

நிறுவனத்தின் பெயர-மாவட்ட செயலகம் மாத்தளை

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) ன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No –79

Name of the Institution – District Secretariat, Matale

Submission of observations of the Hon' minister in charge of the instituions and Steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No.119(4)

செயற்குழுவினால் கண்டறியப்பட்ட குறைப்பாடுகள்	குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் /தற்போதைய நிலைமை
01. நிலையானச் சொத்து ஆவணமானது, இற்றைப்படுத்திப் பராமரிக்கப்பட்டு இருக்காமை.	அரச அலுவலகமொன்றில் பராமரிக்கப்பட வேண்டிய 21 ஆவணங்களை பராமரிப்பது தொடர்பாக மாத்தளை மாவட்ட செயலகத்திற்குட்பட்ட சகல பிரதேச செயலகங்களினதும் கணக்காளர்கள் மற்றும் விடயத்திற்கு பொறுப்பான எழுதுவினைஞர்களை ஒன்றுதிரட்டி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், தற்போது சகல அலுவலகங்களிலும் நிலையானச் சொத்து ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக கணக்காய்வு முகாமைத்து குழுக் கூட்டத்தின் போது முன்னேற்றமானது மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.
02. அத்துமீறல் ஆவணமானது, இற்றைப்படுத்திப் பராமரிக்கப்பட்டு இருக்காமை.	கணக்காய்வு ஐயவினாக்களுக்கு உட்பட்ட தம்புள்ளை பிரதேச செயலகத்தின் அத்துமீறல் ஆவணமானது தற்போது இற்றைப்படுத்தப்பட்டுள்ளதுடன், மாத்தளை மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலகங்களிலும் அத்துமீறல் ஆவணங்களானது இற்றைப்படுத்தி பராமரிக்கப்பட்டு வருகின்றன.
03. மாதாந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களை நடாத்தி இருக்காமை.	மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது 2022 ஆம் வருடம் பெப்ரவரி மாதம் 02 ஆந் திகதி மற்றும் செப்டம்பர் மாதம் 28 ஆந் திகதி ஆகிய இரண்டு தினங்களில் நடாத்தப்பட்டதுடன், மற்றைய மாதங்களில் அச் சமயத்தில் நிகழ்ந்த கொரோனா தொற்று நோய் காரணமாக இக் கூட்டத்தினை நடாத்த இயலவில்லை. அவ் வருடத்தில் அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் இலக்கம் HA/DEVP/pro/General/2017-03-DCC-Voll iv மற்றும் 2022.09.07 ஆந் திகதிய கடித்தின் ஊடாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவர்களின் பதவிகளை இரத்துச் செய்து, மீண்டும் புதிய தலைவர்களை நியமித்ததன் பின் இக் குழுக் கூட்டத்தினை நடாத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருப்பதால் கூட்டமானது நடாத்தப்படவில்லை. 2023 ஆம் வருடத்தில் ஜனவரி மற்றும் மார்ச் மாதத்தில் அச்சமயத்தில் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமைகளினாலும், ஜூலை மற்றும் செப்டம்பர் மாதங்களில் முறையாக கலந்துரையாடுவதற்கு விடயங்கள் இல்லாமை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் வேலைப்பழுக் காரணமாக கூட்டத்தினை நடாத்த திகதி ஒன்றை தீர்மானிப்பதற்கு முடியாமை காரணமாக குழுக் கூட்டத்தினை நடாத்தவில்லை என்பதோடு, 2023 ஆம் வருடம் டிசம்பர்

	மாதம் ஜனாதிபதி அவர்களின் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டது. 2024 ஆம் வருடத்தில் மார்ச், ஏபரல் மற்றும் மே ஆகிய மாதங்களில் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் தொழில் நிறுத்தம் காரணமாக கூட்டம் நடாத்த இயலவில்லை என்பதோடு, ஆகஸ்ட் மாதம் வரையில் மாதத்திற்கு ஒரு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது.
04. மாவட்ட செயலாளரின் தலைமையில் பிரதேச செயலக மாநாடானது மாதாந்தம் நடாத்தப்படாமை.	2023 ஆம் வருடத்தில் ஏற்பட்ட மிகவும் வரையறுக்கப்பட்ட நிதியினுள் அரச செலவினங்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக தேசிய வரவுசெலவு சுற்றிக்கை இலக்கம் 03/2022, 08/2022, 09/2022 மற்றும் ஜனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட PS/SB/Circular/10/2022 மற்றும் 2022.08.15 ஆந் திகதிய சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அரச நிறுவனங்களினால் பல்தரப்பட்ட உற்சவ நிகழ்ச்சிகள் நடாத்தல் கூடாது என்று கடுமையாக வலியுறுத்தப்பட்டிருந்ததுடன், இதற்கமைய பிரிவு மட்டத்தில் பிரதேச செயலாளர்களின் மாநாடு நடாத்தப்படவில்லை என்பதோடு, பெருமளவில் மின்னஞ்சல் (ஈ.மெயில்), whatsapp மற்றும் zoom தொழில்நுட்பம் ஊடாக பிரதேச செயலாளர்களை அறிவூட்டும் நடவடிக்கைகள் செலவீனமின்றி நடாத்தியதுடன், அவசியமான கடமைக்காக மாவட்ட செயலகத்தில் நடைபெறும் கூட்டங்களின் போது இவ் உத்தியோத்தர்களுக்கு இது தொடர்பாக அறிவூட்டப்பட்டுள்ளன.
05. மாவட்ட பசளை ஒருங்கிணைப்புக் குழுவானது மாதாந்தம் ஒன்றுகூடாமை.	மாவட்ட பசளை ஒருங்கிணைப்பு குழுவானது வருடத்தில் பிரதான இரு பயிர்ச் செய்கையின் போது ஒன்றுகூடுவதுடன், 2023.02.07 ஆந் திகதி பெரும் போகம் மற்றும் 2023.09.20 ஆந் திகதி சிறு போகம் ஆகிய இரு பிரதான பயிர்ச் செய்கையாக இக்கூட்டம் நடாத்தப்பட்டதுடன், இவ் வருடத்தில் ஆகஸ்ட் மாதம் 16 ஆந் திகதி மாவட்ட பசளை ஒருங்கிணைப்பு குழுக் கூட்டமானது நடாத்தப்பட்டது.
06. மாவட்ட விலை நிர்ணய குழுவானது மாதாந்தம் ஒன்றுகூடாமை.	மாவட்ட விலை நிர்ணய குழுவானது வருடத்தின் முதல் ஆறு மாதங்கள் மற்றும் இறுதி ஆறு மாதங்களாக இருமுறை நடாத்தப்படுவதுடன், 2023 ஆம் வருடத்தில் அக் கூட்டமானது முறையாக நடாத்தப்பட்டன.
07. முழு பணிக்குழாமிற்குமான செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்காமை.	2022 ஆம் வருடத்தின் சகல உத்தியோகத்தர்களுக்குமான செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதுடன், 2023 ஆம் வருடம்

	முதல் பொது நிர்வாக சுற்றிக்கை இலக்கம் 02/2018 பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
08. மனிதவள அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்கான ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு நிறுவனத்தினுள் சிரேஷ்ட நிலை உத்தியோகத்தரின் பெயரினைக் குறிப்பிடாமை.	மனிதவள அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்கு மற்றும் ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு நிறுவனத்தினுள் சிரேஷ்ட நிலை உத்தியோகத்தராக மேலதிக மாவட்ட செயலாளர் அவர்கள் 2020 ஆம் ஆண்டு முதல் பெயர் குறிப்பிடப்பட்டு கடமைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் வருடாந்த பயிற்சித் திட்டமானது தயாரிக்கப்படும்.
09. மாவட்ட மற்றும் பிரதேச போதைப்பொருள் ஒழிப்பு குழுக் கூட்டமானது காலாண்டுக்கு ஒரு தடவை ஒன்றுகூடாமை.	2023 ஆம் வருடத்தில் நிலவிய நிதி நிலைமை அடிப்படையில் போதைப் பொருள் ஒழிப்புக் குழுவினை நடாத்துவதற்கு போதுமான நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு இடர்பாடு நிலவியதுடன், அரச உத்தியோகத்தர்களை அடிக்கடி கூட்டங்களுக்காக அழைப்பது தொடர்பாக நிலவிய அசௌகரியங்கள் காரணமாக பல கூட்டங்கள் ஒரே தினத்தில் நடாத்தப்பட்டது. 2023 ஆம் வருடத்தில் மூன்றாவது காலாண்டில் சிறுவர் குழுக் கூட்டமானது நடாத்தப்பட்ட போது போதைப்பொருள் ஒழிப்பு குழுவானது ஸ்தாபிக்கப்பட்டதுடன் நான்காவது காலாண்டில் சிறுவர் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கு பல விடயங்கள் காணப்பட்டமையினால் இப் போதைப் பொருள் ஒழிப்பு குழு கூடுவதற்கு முடியாமல் போனதுடன், தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஒத்துழைப்புடன் போதைபொருள் ஒழிப்பு குழுக் கூட்டம் நடாத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
10. திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களின் போது வழங்கப்பட்ட பயிற்சி 50% விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை.	2022 ஆம் வருடத்தில் திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களின் எண்ணிக்கை 20 ஆவதுடன், நடாத்தப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் 16 ஆகும். இதன்படி பயிற்சி வாய்ப்புக்கள் தொடர்பான சதவீதம் 72.7% ஆகும். அத்தோடு அவ் வருடத்தில் திட்டமிடப்பட்ட பயிற்சி பட்டறைகளின் எண்ணிக்கை 35 ஆவதுடன், நடாத்தப்பட்ட பயிற்சி பட்டறைகளின் எண்ணிக்கை 16 ஆகும். அதன்படி இதன் சதவீதம் 45.71% ஆகும். 2022 ஆம் வருடத்திற்கு திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டத் தொகை ரூ.1,725,805.00 ஆவதுடன் அதற்காக ரூ.500,000.00 நிதியானது ஒதுக்கீடுச் செய்யப்பட்டது. அதன்படி மதிப்பீடுச் செய்யப்பட்ட நிதியில் 28.97% சதவீதமான நிதியே கிடைக்கப் பெற்றுள்ளது. இதுதொடர்பாக மேலதிக நிதியினை கோரினாலும் நிதி வரையறுக்கப்பட்ட அளவில் காணப்படுவதால் அவ் நிதியினை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

12.දිස්ත්‍රික් පරිසර කමිටු අවම වශයෙන් මාස 02කට වරක් රැස් වී නොතිබුණි.	දිස්ත්‍රික් පරිසර කමිටුව පැවැත්වීම මහජනතාවගෙන් හා ප්‍රාදේශීය ලේකම් කාර්යාල වලින් පරිසර ගැටළු සම්බන්ධයෙන් ලැබෙන ලිපි ප්‍රමාණය මත සිදු කරනු ලබයි. මීට අමතරව දිස්ත්‍රික් කෘෂිකර්ම කමිටු හා ඉඩම් පරිහරණ කමිටු මඟින් පරිසර ගැටළු සාකච්ඡා කිරීම සිදු කරනු ලබයි. ඒ අනුව එම වසරේ රාජ්‍ය වියදම් කළමනාකරණය සම්බන්ධයෙන් ලබා දී ඇති උපදෙස් අනුව රැස්වීම් දෙකක් පමණක් පවත්වා ඇත

තේජානි තිලකරත්න,
දිස්ත්‍රික් ලේකම්/දිසාපති,
මාතලේ.

තේජානි තිලකරත්න
දිස්ත්‍රික් ලේකම් / දිසාපති
මාතලේ.

පී.ඩබ්.එස්.කේ.විජේසිංහ,
ප්‍රධාන ගණකාධිකාරි,
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය,
මාතලේ.

පී.ඩබ්.එස්.කේ. විජේසිංහ
ප්‍රධාන ගණකාධිකාරි
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය
මාතලේ.